செங்குன்றத்தில் 10 கிலோ கஞ்சா பறிமுதல்: ஒருவர் கைது

ஆவடி, ஜூன் 6–

ஆவடி காவல் ஆணையரகத்தில் போதைப்பொருள் இல்லா தமிழகம் என்ற கோட்பாட்டை வலியுறுத்தி ஆவடி காவல் ஆணையாளர் கி.சங்கர் உத்தரவுபடியும், கூடுதல் ஆணையாளர் கே.பவானீஸ்வரி மேற்பார்வையில் அம்பத்தூர் மதுவிலக்கு அமல் பிரிவி உதவி ஆணையாளர் வழிகாட்டுதலின் படியும் செங்குன்றம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் ஆய்வாளர் சசிகுமார் தலைமையில் தனிப்படை போலிசார் செங்குன்றம் மதுவிலக்கு அமல்பிரிவு எல்லைக்குட்பட்ட மீஞ்சூர், செங்குன்றம், மணலி, அத்திப்பட்டு, எண்ணூர் ஆகிய பகுதிகளில் கஞ்சா என்னும் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதை தடுப்பதற்காக தீவிர சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது செங்குன்றம் பஸ் ஸ்டேண்ட் அருகில் சந்தேகம்படியாக நடந்து வந்த முகுந்தன் (47) என்பவர் வைத்திருந்த பேக்கை சோதனை செய்த போது அதில் 10 கிலோ கஞ்சா இருந்ததை கண்டுபிடித்து அதை கைப்பற்றி அவரை கைது செய்தனர். அவர் மீது செங்குன்றம் மதுவிலக்கு வழக்குப்பதிவு செய்து பொன்னேரி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி எதிரிகளை புழல் மத்திய சிறையில் அடைத்தனர்.

'நீட்' முதுநிலைத் தேர்வு: ஆகஸ்ட் 3 ந்தேதி நடத்த உச்ச நீதிமன்றம் அனுமதி

டெல்லி, ஜூன் 6–

'நீட்' முதுநிலைத் தேர்வை ஆகஸ்ட் 3 ந்தேதி நடத்த அனுமதி அளித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

'நீட்' முதுநிலைத் தேர்வை ஆகஸ்ட் 3 ந்தேதிக்கு நடத்த அனுமதி கோரிய தேசிய தேர்வுகள் வாரியத்தின் மனு மீதான விசாரணை உச்ச நீதிமன்றத்தில் இன்று நடைபெற்றது. விசாரணை முடிவில் 3 ந்தேதி தேர்வை நடத்த உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியது. 2.20 லட்சம் மாணவர்கள் தேர்வை எழுதுகின்றனர்.

இது குறித்து தேசிய தேர்வுகள் வாரியம் நீதிமன்றத்தில் வைத்த வாதத்தில், தேர்வை ஒரே ஷிப்ட் அடிப்படையில் நடத்தினால், தற்போது உள்ள தேர்வு மையங்களை விட 450 கூடுதல் மையங்கள் தேவைப்படும். எனவே தேர்வை ஆகஸ்ட் 3 ஆம் தேதி நடத்த அனுமதிக்க வேண்டும். தேர்வு மையங்களை கண்டறிந்து அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள கூடுதல் அவகாசம் தேவைப்படுகிறது என்று தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து நீதிபதிகள், தேர்வு வாரியம் கோரும் அவகாசம் மிக அதிகமாக உள்ளது. கால அவகாசத்தை குறையுங்கள். மையங்களை கண்டறிய ஏன் இவ்வளவு அவகாசம் தேவைப்படுகிறது? என்று தெரிவித்தனர்.

பாதுகாப்பு காரணங்களுக்காகதான் கூடுதல் அவகாசம் கோருகிறோம். அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு வந்துள்ளனர். பல்வேறு தேர்வுகள் ஏற்கெனவே மாற்றி வைக்கப்பட்டுள்ளது. நடைமுறை சிக்கல்கள் காரணமாக கூடுதல் அவகாசம் தேவை. இரண்டு மடங்காக மையங்களை அதிகப்படுத்த வேண்டியுள்ளது. மாணவர்களின் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று தேர்வு வாரியம் தெரிவித்தது.

மாணவர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், தேர்வுகளை நடத்த தயார் நிலையில் உள்ளதாக தேர்வுகள் வாரியத்தின் இணைய பக்கத்தில் கூறப்பட்டுள்ளது. தேர்வு நடத்தும் TCS நிறுவனமும் அதை உறுதிப்படுத்தியுள்ளது. மற்ற தேர்வுகளைப் போல் அல்லாமல் பாடத்திட்டங்கள் அடிப்படையிலான தேர்வு இது என மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட உச்சநீதிமன்றம், கூடுதல் கால அவகாசம் வழங்கி உத்தரவிடப்படுகிறது என்றும், நீட் முதுநிலைத் தேர்வை ஆகஸ்ட் 3 ஆம் தேதி நடத்தலாம். ஆகஸ்ட் 3 ஆம் தேதிக்கு பிறகு கூடுதல் அவகாசம் வழங்கப்படாது. அன்றே தேர்வை நடத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் நடைபெற்ற திரைப்பட தயாரிப்பாளர் கலைப்புலி எஸ்.தாணுவின் பேரன் ஏ.என்.ஆதித்யன் – டாக்டர் ப்ரிதா பாலாஜி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

ஓய்வு பெற்ற நீதிபதி எம்.எஸ்.ஜனார்த்தனம் மறைவு: முதல்வர் ஸ்டாலின் இரங்கல்

காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த உத்தரவு

சென்னை, ஜூன் 3–

ஓய்வு பெற்ற நீதிபதி எம்.எஸ்.ஜனார்த்தனம் மறைவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது:–

ஓய்வு பெற்ற நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் மறைவுற்ற செய்தியறிந்து மிகவும் உளம் வருந்தினேன்.

நீதித்துறையின் மாண்பையும், சீரிய மரபையும் காத்து வந்தவர் என்பதுடன், கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது அருந்ததியருக்கு 3 விழுக்காடு உள்ஒதுக்கீடு கொண்டு வருவதற்கான பரிந்துரையை அளித்த குழுவின் தலைவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணைய த்தலைவராக இருந்தபோது, பிற்படுத்தப்பட்டோருக்கான தமிழ்நாடு அரசின் இடஒதுக்கீட்டை உறுதி செய்வதற்கான அறிக்கையினையும் தயாரித்து அளித்தவர் ஆவார்.

நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் மறைவு நீதித்துறைக்கு மட்டுமின்றி சமூக நீதி கருத்தியல் தளத்தில் இயங்கும் அனைவருக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

அவரை இழந்துவாடும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் நீதித்துறை சார்ந்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதற்கிடையில் எம்.எஸ்.ஜனார்த்தனம் உடலுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நீதிபதி எம்.எஸ்.ஜனார்த்தனம், 1988 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றி வரலாற்று சிறப்புமிக்க பல தீர்ப்புகளை வழங்கியவர். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவராக 2006 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட இவர், 2015 ஆம் ஆண்டு வரை அப்பொறுப்பில் நீடித்தார். இவரது பரிந்துரையின் அடிப்படையில் தான் தமிழகத்தில் இஸ்லாமியர்கள் இட ஒதுக்கீடு, கிறித்தவர்கள் இட ஒதுக்கீடு, அருந்ததியர் இட ஒதுக்கீடு ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டன. சமூகநீதி வரலாற்றில் தமது முத்திரையை மிகவும் ஆழமாக பதித்தவர் இவர். நீதிபதி எம்.எஸ்.ஜனார்த்தனம் மறைவு சமூக நீதித்துறைக்கு ஏற்பட்ட ஈடு செய்ய முடியாத இழப்பு ஆகும்.

அன்னார் நீதி துறைக்கும், மாநிலத்திற்கும் ஆற்றிய சேவையை போற்றும் வகையில் அவரது இறுதி நிகழ்வு காவல் துறை மரியாதையுடன் நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வேலங்காடு மயானபூமிக்கு பதில் வில்லிவாக்கம், ஓட்டேரி மயான பூமி

சென்னை, ஜூன் 6–

அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட வேலங்காடு மயானபூமியில் பராமரிப்பு பணிகள் நடைபெறவுள்ளதால், பொதுமக்கள் வில்லிவாக்கம் அல்லது ஓட்டேரி மயானபூமிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

சென்னைமாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு102க்கு உட்பட்ட வேலங்காடு மயானபூமியில் மின்மயான தகனமேடையில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள உள்ளதால் நாளை (7–ந் தேதி) முதல் 9–ந் தேதி வரை மேற்கண்ட மயானபூமி இயங்காது.

எனவே, பராமரிப்பு பணிகள் நடைபெறும் நாட்களில், பொதுமக்கள் அருகிலுள்ள வில்லிவாக்கம் அல்லது ஒட்டேரி மயானபூமிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

சர்வதேச லெவல் கிராசிங் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு, சென்னை ரெயில்வே கோட்டத்தின் பாதுகாப்புத் துறை சார்பில் கோட்ட ரெயில்வே மேலாளர் அலுவலகத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு பிரச்சாரத்தை கூடுதல் கோட்ட ரெயில்வே மேலாளர் தேஜ் பிரதாப் சிங், கொடியசைத்து தொடங்கி வைத்தார். சீனியர் கோட்ட பாதுகாப்பு அதிகாரி ஆர். சத்திய சீலன் பிரச்சாரத்திற்கு தலைமை தாங்கி பொதுமக்களிடம் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களை வழங்கினார்.

NAME CHANGE

I, Vishal Goel R, Son of Mr. Rajaram Goel, Date of Birth: 06.05.2000, aged about 25yrs, and residing at Old No. 9, New No. 17, Krishnappa Agraharam Street, Kondithope, Chennai-600001, shall henceforth be known as VISHAL GOEL

Vishal Goel R

பெயர் மாற்றம்

Old Surname Name: **CHINNA AHAMED MEERA**
Old Given Name: **ALAMBARAIYAR HABIB**
த/பெ. Alambaraiyar Akbar Habibur Rahman, பிறந்த தேதி: 14/01/1969, பிறந்த மாவட்டம்: சென்னை, முகவரி: எண்.5, அங்கமுத்து தெரு, ராயப்பேட்டை, சென்னை 600014 இல் வசிக்கும் நான் இனி, New Surname Name: **ALAMBARAIYAR HABIB**
New Given Name: **CHINNA AHAMED MEERA**
என்று அழைக்கப்படுவேன்.

பெயர் மாற்றம்

நான், **SHOBANA REJENDRAN**, கணவர் பெயர்: **Uthayashankar**, பிறந்த தேதி : 30.06.1990, 6/B, MGR நகர், அண்ணா தெரு, தரமணி, சென்னை 600113, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SHOBANA UTHAYASHANKAR** என்று அழைக்கப்படுகிறேன்.

SHOBANA REJENDRAN

பெயர் மாற்றம்

10, ஈ.வி.ஆர். தெரு, மீனம்பாக்கம், சென்னை 600027, என்ற முகவரியில் வசிக்கும் **SWAMINATHAN SRILAKSHMI (Surname Swaminathan)** அதாவது **K. SRILAKSHMI, KANDASWAMY SRILAKSHMI (Surname Kandaswamy)** என்று மட்டும் அறியப்படுகிறார்.

PUBLIC NOTICE

General Public are hereby informed that our client **Coromandel International Limited,** having one of its manufacturing locations at #Compound Fertilisers Factory, No.2, Ennore Express Highway, Ennore, Chennai-600 057is the title holder and owner of property situated at the location more fully described in the Schedule here to ("Schedule Property"). Notice is hereby given that the **Sale Deed bearing No.750/1960**, dated 16.03.1960, executed by Mohamed Ali Khan & Ghulam Safdar Khan Sahib in favour of The East India Distilleries and Sugar Factories Limited,("EID") [later on acquired by Coromandel International Limited through the demerger of the farms input division of EID pursuant to the scheme of Demerger dated 30th September 2003, sanctioned by the High Court of Madras] registered at SRO, Sembiam has been misplaced and not traceable yet despite the genuine search efforts across all our office locations.

Description of the Schedule Property

All that piece and parcel of agricultural land, measuring (i) 3.75 Acres comprised in Survey No.7, (ii) 16.69 Acres comprised in Old Survey No.12/3/2 and New Survey No.12/2B and (iii) 20.58 Acres comprised in Old Survey No.12/2/2 and New Survey No.12/2A, totally measuring 41.02 Acres, situated at Ernavur Village, lying within the registration District of Chengalpet and Registration Sub-district of Sembiam.

If found, kindly inform to **Mrs.Jemmy Vasanth, Advocate, at No.367, III Floor, Additional Law Chambers, HC Buildings, Chennai-1 or at her mobile-98410 11791**.

Date: 05.06.2025, Place: Chennai.

ஈசாப் இந்தியா லிமிடெட்

CIN:L29299TN1987PLC058738
பதிவு அலுவலகம் : எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058. தொ.பேசி எண். 044-4228 1100 இ-மெயில்: investor.relations@esab.co.in

அறிவிப்பு

மே 27, 2025 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழுவின் கூட்டத்தில், மார்ச் 31, 2025 அன்று முடிவடைந்த ஆண்டுக்கு ஒவ்வொன்றும் ரூ.10/– மதிப்புள்ள ஈக்விட்டி பங்கிற்கு இறுதி ஈவுத்தொகையாக ரூ.42/–ஐ (அதாவது, 420%) பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்பது இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. இது ஆகஸ்ட் 14, 2025 வியாழக்கிழமை நடைபெறும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களின் ஒப்புதலுக்கு உட்பட்டது.

ஈவுத்தொகை விவரங்கள்	
ஈவுத்தொகை விகிதம்	ஒரு சமபங்கிற்கு ரூ.42/–
ஈவுத்தொகை உரிமைக்கான பதிவு தேதி	ஆகஸ்ட் 7, 2025, வியாழக்கிழமை
ஈவுத்தொகை செலுத்துதல்	வருடாந்திர பொதுக்கூட்டத் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள்

வருமான வரிச் சட்டம், 1961ன்படி, பங்குதாரர்களின் ஈவுத்தொகை வருமானம் வரிக்கு உட்பட்டது, மேலும் நிறுவனம் மேற்கூறிய ஈவுத்தொகையிலிருந்து பொருந்தக்கூடிய ஆதாரத்தில் வரியை (TDS) கழிக்கும்.

குடியுரிமை மற்றும் குடியுரிமை பெறாத பங்குதாரர் வகைகளுக்கான சட்டத்தின் கீழ், ஆதாரத்தில் பொருந்தக்கூடிய வரி விலக்கு (TDS) விதிகளின் விவரங்களை இந்தத் தகவல் வழங்குகிறது.

பூஜ்ய வரி அல்லது குறைக்கப்பட்ட வரி விகிதத்தைப் பெற விரும்பும் பங்குதாரர்கள், பதிவாளரின் இணையதளம் https://ipostatus.integratedregistry.in/TaxExemptionRegistration.aspx–ல் தங்கள் கோரிக்கைக்கு ஆதரவாகத் தேவையான சான்றுகள் அல்லது ஆவணத்தை 09 **ஆகஸ்ட்,** 2025 அன்று வணிக நேரம் முடிவதற்கு முன் பதிவேற்றம் செய்யமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

A. குடியுரிமை பங்குதாரர்களுக்கு:

- குடியுரிமைப் பங்குதாரர்களால் செல்லுபடியாகும் நிரந்தர கணக்கு எண் (PAN) வழங்கப்பட்டால், செலுத்த வேண்டிய ஈவுத்தொகையின் மீது 10% TDS கழிக்கப்படும்.
- PAN இல்லாத / செல்லாத PAN / செயல்படாத PAN போன்றவற்றுக்கு TDS 20% கழிக்கப்படும்.

எனவே, தங்கள் நிரந்தர கணக்கு எண்ணை (PAN) தங்கள் வைப்புத்தொகை பங்கேற்பாளர்களுக்கு இன்னும் வழங்காத பங்குதாரர்கள் உடனடியாக அவ்வாறு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எவ்வாறாயினும், செலுத்த வேண்டிய ஈவுத்தொகையிலிருந்து TDS கழிக்கப்படாது: தனிப்பட்ட பங்குதாரர்கள், என்றால்:

- ஒரு நிதியாண்டில் நிறுவனம் செலுத்த வேண்டிய ஈவுத்தொகை தொகையானது, மொத்தமாக, 10,000/–க்கு மிகாமல் அல்லது
- அவர்களின் வருமானம் வரி விதிக்கக்கூடிய வரம்பிற்குக் குறைவாக உள்ளது மற்றும் பங்குதாரர்களிடமிருந்து படிவம் 15G (60 வயது வரையிலான தனிநபர்கள்) அல்லது படிவம் 15Hல் (60 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு) அறிவிப்பு பெறப்படுகிறது.
- இந்த படிவங்களை அதாவது. படிவம் 15G மற்றும்/அல்லது படிவம் 15Hஐ https://ipostatus.integratedregistry.in/TaxExemptionRegistration.aspx என்ற இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

குறிப்பிடப்பட்ட வடிவத்தின்படி விவரங்கள் மற்றும் ஆவணங்களை வழங்கும் கீழ்க்கண்ட குடியுரிமை அல்லாத தனிநபர்களுக்கு செலுத்த வேண்டிய ஈவுத்தொகைக்கு எந்த வரியும் கழிக்கப்படாது.

ஏ) காப்பீட்டு நிறுவனங்கள்: அவர்கள் வைத்திருக்கும் பங்குகளின் நன்மை பயக்கும் உரிமையாளர்கள் என்பதற்கான உறுதிமொழி மற்றும் செல்லுபடியாகும் IRDAI பதிவுச் சான்றிதழின் சுய சான்றொப்பமிடப்பட்ட நகலை சமர்ப்பிக்க வேண்டும்.

பி) பரஸ்பர நிதிகள்: சட்டப் பிரிவு 10(23D)ன் விதிகளின்படி அவை நிர்வகிக்கப்படுகின்றன என்பதற்கான உறுதிமொழி மற்றும் செல்லுபடியாகும் செபி பதிவுச் சான்றிதழின் சுயசான்றளிக்கப்பட்ட நகலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

சி) மாற்று முதலீட்டு நிதி (AIF) (இந்தியாவில் நிறுவப்பட்ட வகை I மற்றும் II): அதன் வருமானம் சட்டப் பிரிவு 10(23FBA)ன் கீழ் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது மற்றும் அவை செபி விதிமுறைகளின் கீழ் வகை I அல்லது வகை II AIF என நிறுவப்பட்டது. பதிவு ஆவணங்களின் நகல் (சுய சான்றொப்பம்) வழங்கப்பட வேண்டும்.

டி) TDS–லிருந்து விலக்கு பெறும் உரிமையுள்ள வேறு எந்த நிறுவனமும்: TDS விலக்கு பெறும் நிறுவனத்திற்கு ஆதரவாக, செல்லுபடியாகும் சுயசான்றளிக்கப்பட்ட ஆவணச் சான்றுகள் (எடுத்துக்காட்டு பதிவு, அறிவிப்பு, ஆணை போன்றவற்றின் தொடர்புடைய நகல்) சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

B. குடியுரிமை பெறாத பங்குதாரர்களுக்கு

வருமான வரிச் சட்டம், 1961, பிரிவு 195ன் விதிகளின்படி, குறிப்பிட்ட நபரின் இணக்கத்திற்கு உட்பட்டு நடைமுறையில் உள்ள விகிதங்களில் வரிகள் நிறுத்தப்பட வேண்டும்.

வெளிநாட்டு போர்ட்போலியோ முதலீட்டாளர்கள், வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் மற்றும் பிற குடியுரிமை பெறாத பங்குதாரர்களுக்கு செலுத்த வேண்டிய டிவிடெண்ட் தொகையில் TDS @ 20% (**கூடுதலாக பொருந்தக்கூடிய கூடுதல் கட்டணம் மற்றும் செஸ்)** அல்லது வரி ஒப்பந்த விகிதம், எது குறைவாக இருந்தாலும் கழிக்கப்படும்.

வரி ஒப்பந்த விகிதத்தின் பலனைப் பெற, பங்குதாரர்கள் பின்வரும் ஆவணங்களை நிறுவனத்திடம் சமர்ப்பிக்க வேண்டும், அவை எல்லா வகையிலும் முழுமையாக இருக்க வேண்டும்:

1. பங்குதாரர் வசிக்கும் நாட்டின் வரி அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட வரி வதிவிடச் சான்றிதழின் (TRC) சுயசான்றளிக்கப்பட்ட நகல் (2025–26 நிதியாண்டிற்கு TRC செல்லுபடி யாகும்)
2. இந்தப் படிவத்தில் தேவைப்படும் அனைத்து விவரங்களும் TRC ல் குறிப்பிடப்படவில்லை என்றால், பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தின்படி படிவம் 10Fல் சுய அறிவிப்பு
3. இந்திய வருமான வரி அதிகாரிகளால் ஒதுக்கப்பட்ட நிரந்தர கணக்கு எண்ணின் (PAN கார்டு) சுயசான்றளிக்கப்பட்ட நகல் ஏதேனும் இருந்தால்
4. பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தின்படி, குடியுரிமை பெறாத பங்குதாரரால் நன்மை பயக்கும் உரிமையின் சுய அறிவிப்பு.

பயனளிக்கும் வரி ஒப்பந்த விகிதத்தைப் பயன்படுத்துதல் உட்பட, மேற்கூறிய ஆவணங்களின் பரிசீலனையானது, பங்குதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அத்தகைய ஆவணங்களின் போதுமான தன்மை மற்றும் முழுமையைப் பொறுத்தது மற்றும் நிறுவனத்தின் திருப்திக்காக அதை மறுபரிசீலனை செய்தல்.

அதன்படி, பொருத்தமான TDS/தடுப்பு வரி விகிதத்தைத் தீர்மானிக்க எங்களுக்கு உதவ, மேலே குறிப்பிட்டுள்ளபடி இந்த விவரங்கள் மற்றும் ஆவணங்களை 9 **ஆகஸ்ட்,** 2025 சனிக்கிழமை அன்று வர்த்தக நேரம் முடிவதற்குள் அல்லது அதற்கு முன்பாகவோ வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- மேற்கூறிய ஆவணங்கள் இல்லாத நிலையில் அல்லது தாமதமாகப் பெறப்பட்டதன் காரணமாக ஈவுத்தொகை மீதான குறைந்த வரியின் பலனை நிறுவனத்தால் வழங்க முடியாது. பங்குதாரர்கள் தங்களின் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்யும்போது, தகுதியுடையவர்களாக இருந்தால், உரிய பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான விருப்பம் இன்னும் இருக்கும். **ஒருமுறை கழிக்கப்பட்ட வரிகளுக்காக நிறுவனத்திற்கு எதிராக எந்தக் கோரிக்கையும் இல்லை.**

விதி 37BA இன் கீழ் நன்மை:

பதிவு தேதியின்படி பதிவு செய்யப்பட்ட பங்குதாரரைத் தவிர, ஈவுத்தொகை வருமானம் ஒரு நபருக்கு வரி விதிக்கப்படலாம். பதிவு செய்யப்பட்ட பங்குதாரர் TDS கிரெடிட் வழங்கப்பட வேண்டிய நபரின் பெயர், முகவரி, PAN மற்றும் அத்தகைய நபருக்கு கடன் வழங்குவதற்கான காரணங்களைக் கொண்ட ஒரு அறிவிப்பை வழங்க வேண்டும்.

கிளியரிங் உறுப்பினர்கள் / இடைத்தரகர்கள் / பங்குத் தரகர்கள் பங்குகளை வைத்திருந்தால், மற்றும் TDS–ஐ நிறுவனம் பயனளிக்கும் பங்குதாரர்களின் PANல் விண்ணப்பிக்க வேண்டும் என்றால் இடைத்தரகர்கள் / பங்கு தரகர்கள் அல்லது மற்றவர்கள் மற்றும் ஆதாய பங்குதாரர்கள் ஒரு அறிவிப்பை வழங்க வேண்டும். அறிவிப்பின் வடிவம் லிங்க் https://ipostatus.integratedregistry.in/TaxExemptionRegistration.aspx.ல் உள்ளது. இந்த உறுதிமொழி ஆவணம், 9 **ஆகஸ்ட்,** 2025 அன்று அல்லது அதற்கு முன், அதாவது, பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து 2 நாட்களுக்குள் RTAக்கு குறிப்பிடப்பட்ட இணைப்பின் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பதிவு தேதியிலிருந்து 2 நாட்களுக்குப் பிறகு எந்த அறிவிப்பும் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

காகித வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்களுக்கான முக்கிய குறிப்பு:

SEBI, **நவம்பர் 03, 2021 தேதியிட்ட சுற்றறிக்கையில் (பின்னர் டிசம்பர் 14, 2021, மார்ச் 16, 2023 மற்றும் நவம்பர் 17, 2023 தேதியிட்ட சுற்றறிக்கைகளால் திருத்தப்பட்டது) பங்குகளை வைத்திருப்பவர்களின் (காகித வடிவத்தில் பத்திரங்களை வைத்திருக்க வேண்டும்) யாருடைய ஃபோலியோவில் (கள்) PAN அல்லது தொடர்பு விவரங்கள் அல்லது மொபைல் எண் அல்லது வங்கி கணக்கு விவரங்கள் அல்லது புதுப்பிக்கப்பட்ட மாதிரி கையொப்பம் ஆகியவற்றை கட்டாயமாக்கி உள்ளது. அத்தகைய ஃபோலியோக்கள் தொடர்பான ஈவுத்தொகை, வட்டி அல்லது மீட்பு உட்பட எந்தவொரு கட்டணமும் ஏப்ரல் 01, 2024 முதல் மின்னணு முறையில் மட்டுமே செலுத்தப்படும்.**

எனவே, காகித போலியோக்களில் PAN அல்லது தொடர்பு விவரங்கள் அல்லது மொபைல் எண் அல்லது வங்கிக் கணக்கு விவரங்கள் அல்லது தொடர்பான மாதிரி கையொப்பம் புதுப்பிக்கப்படாவிட்டால், ஈவுத்தொகை/வட்டி போன்றவை. மேற்கூறிய அனைத்து விவரங்களையும் முழுமையாக அளித்தவுடன் மின்னணு முறையில் மட்டுமே செலுத்தப்படும்.

இந்தத் தகவல்கள் நிறுவனத்தின் www.esabindia.com **இணையதளத்தில் கிடைக்கும்.**

இயக்குநர்கள் குழுவின் உத்தரவின்படி

இடம்: சென்னை **ஜி பாலாஜி**
தேதி: 06 ஜூன், 2025 **நிறுவன செயலாளர்**

பொது அறிவிப்பு

எனது கட்சிகாரர், கள்ளக்குறிச்சி–606 202, ரங்கன் நகர், துருகம் ரோடு, எண். 88/18, என்ற முகவரியில் வசித்து வரும் திரு. ராமசாமி, அவர்களின் மகன் திரு. R.சண்முக சுந்தரம் அவர்கள் தென் சென்னை தலைமை பதிவு மாவட்டம், ஆவடி உப பதிவு வட்டம், திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், நெ.25, பருத்திப்பட்டு கிராமம், சர்வே எண்.713/1B1partல் அடங்கிய தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் E.W.S "L.I.G" டைபில் அமைந்துள்ள மனை எண்.04/2021க்கு மொத்த விஸ்தீரணம் 640 சதுரடி கொண்ட மனையும் அதில் கட்டப்பட்டிருந்த 640 சதுரடி கொண்ட தளம் போட்ட வீடு மற்றும் மின் இணைப்பு உள்பட உள்ள சொத்தினை கடந்த 11/03/2013 ஆம் தேதியில் திரு. சுப்பிரமணியன் அவர்களின் குமாரர் திரு. எஸ்.மனோகரன் அவர்களிடமிருந்து அவரது சொந்த வருவாயைக் கொண்டு கிரயப் பத்திர எண்.2894/2013, ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரப்படி கிரயம் பெற்றும் ஆண்டு அனுபவித்து வருகிறார். அவ்வாறு ஆண்டு அனுபவித்து வரும் மேற்படி சொத்திற்குண்டான அசல் கிரைய ஆவண எண்கள். 2137/2003, 703/2002, 2894/2013 மற்றும் பொது அதிகார ஆவண எண்.167/2002, ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் ஆவணங்களை 01/06/2025 அன்று வழக்கறிஞரிடம் LEGAL OPINION பெறுவதற்காக சேலையூர் வந்த சமயம், கௌரிவாக்கம் சாய் பாபா கோவிலில் தரிசனம் செய்து விட்டு திரும்பும் போது அவரது இருசக்கர வாகனத்தில் இருந்த அசல் ஆவணங்கள் காணாமல் போய் விட்டது. மேற்படி காணாமல் போன அசல் ஆவணங்கள் கிடைக்கப் பெற்றால், உடனடியாக மேற்குறிப்பிட்ட எனது முகவரிக்கோ அல்லது எனது கட்சிக்காரரிடமோ ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மேற்படி காணாமல் போன எனது கட்சிகாரரின் ஆவணத்தையோ, அவரது கையெழுத்தையோ வேறு யாராவது தவறாக பயன்படுத்தி ஏதேனும் அடமானமோ, கடனோ மற்றும் ஜாமீன் வகைக்காகவோ பயன்படுத்தினால் அது எனது கட்சிகாரரை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்பதை அறியவும். மேலும் வேறு ஏதேனும் வங்கியோ, நிதி நிறுவனமோ மேற்படி காணாமல் போன எனது கட்சிகாரரின் ஆவணத்தின் அடிப்படையில் ஏதேனும் கடன் வழங்கியிருந்தால் இந்த அறிவிப்பு கண்டு 7 நாட்களுக்குள் தகுந்த ஆவண ஆதாரத்துடன் கீழே குறிப்பிட்ட எனது முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். அவ்வாறு செய்ய தவறும் பட்சத்தில் மேற்படி எனது கட்சிகாரரின் ஆவணங்களை தவறாக பயன்படுத்தி பெறபட்ட கடன் எனது கட்சிகாரரை எந்த விதத்திலும் கட்டுபடுத்தாது என்பதை அறியவும்.

S. JOTHI KUMAR, B.Sc, B.L.,
ADVOCATE
No: 108A, G.S.T. Road,
Urappakkam 603 210,
Kancheepuram District,
Email: sjk_bl@yahoo.co.in
TN, INDIA.
Cell: +91 94444 68000

நொடித்தல் மற்றும் திவால்நிலை குறியீடு, 2016ன் கீழ் சொத்துக்களை விற்பனை செய்தல்

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கோஸ்டல் எனர்ஜி பிரைவேட் லிமிடெட்

(கலைப்பில் உள்ளது)

ஏலத் தேதி மற்றும் நேரம்: வியாழக்கிழமை, ஜூலை 10, 2025 அன்று காலை 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை

நொடித்தல் மற்றும் திவால்நிலை குறியீடு, 2016ன் பிரிவு 33ன் கீழ் மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னை பெஞ்ச், M/s. **கோஸ்டல் எனர்ஜி பிரைவேட் லிமிடெட்டின்** கலைப்பைத் தொடங்க ஆகஸ்ட் 27, 2021 தேதியிட்ட உத்தரவில் கூறியுள்ளது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. இந்த அறிவிப்பிற்கு இணங்க M/s. **கோஸ்டல் எனர்ஜி பிரைவேட் லிமிடெட்டிற்கு (கலைப்பில் உள்ளது) CIN: U52599TN1997PTC037547** சொந்தமான சில ஆஸ்திகள் கலைப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக மாண்புமிகு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம், சென்னை பெஞ்ச், ஆகஸ்ட் 27, 2021 தேதியிட்ட உத்தரவின்படி நியமிக்கப்பட்ட கலைப்பாளர் திரு. ராமகிருஷ்ணன் சதாசிவன் அவர்களால் விற்பனை செய்யப்பட உள்ளது.

தயவுசெய்து கவனிக்கவும்: இ-ஏலம் மூலம் சொத்துக்கள் விற்பனையானது **"எங்கே உள்ளதோ அங்கேயே", "எப்படி உள்ளதோ அப்படியே"** மற்றும் **"எந்தவித மாற்றமும் இல்லாமல்"** மற்றும் **"ஆதார அடிப்படையின்றி"** கண்டிப்பாக நடைபெறும். மேலும், விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், இ-ஏல டெண்டர் ஆவணம் மற்றும் ஆன்லைன் ஏல விற்பனையின் பிற விவரங்கள் **https://ibbi.baanknet.com/eauction-ibbi/home** என்ற இணையதளத்தில் கிடைக்கின்றன அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரியில் கலைப்பாளரை அணுகலாம்.

வருங்கால ஏலதாரர்கள் தேவையான ஆவணங்களை ஏலப் படிவம்,நொடித்தல் மற்றும் திவால்நிலை குறியீட்டின் பிரிவு 29An கீழ் தகுதி ஆவணம் மற்றும் பிற KYC ஆவணங்களை BAANKNET மின்னணு ஏல தளத்தின் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

வருங்கால ஏலதாரர்கள் BAANKNET ஏல தளத்தின் மூலம் டேவணித் தொகை டெபாசிட்டை (EMD) டெபாசிட் செய்ய வேண்டும்.

வெற்றிகரமான ஏலதாரர் தகுதியற்றவராகக் கண்டறியப்பட்டால் அல்லது ஏல செயல்முறை குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி வேறு ஏதேனும் தவறைச் செய்தால், டேவணித் தொகை டெபாசிட் (EMD) மற்றும் தவறு கண்டறியப்பட்ட தேதி வரை செலுத்தப்பட்ட அனைத்து பிற தொகைகளும் பறிமுதல் செய்யப்படும்.

மேலும் விவரங்களுக்கு, சம்பந்தப்பட்ட தரப்பினர் கலைப்பாளரைத் தொடர்பு கொள்ளலாம்—மின்னஞ்சல் முகவரி: **cirp.cepl@gmail.com** (அல்லது) **sadasivanr@gmail.com.**

ஏலத்தில் விடப்பட உள்ள சொத்துக்களின் அட்டவணை

வ. எண்.	சொத்து	ரிசர்வ் விலை (ரூபாய்)	EMD (ரூபாய்)	ஏல அதிகரிப்பு (ரூபாய்)
1	ராமநாதபுரத்தில் உள்ள நிலங்கள் விற்பனை : சர்வே எண்கள்: 36/2C, 39/2A, 36/2B, 36/2A, 36/2D, 68/9, 30/1C3, 184/2, 39/1B, 39/1C, 39/1A, பனையடியேந்தல் கிராமம், கீழக்கரை தாலுக்கா, 9/2F, இடம்பலல் கிராமம், கீழக்கரை தாலுகா & 21/10A சிக்கல் கிராமம், கடலாடி தாலுக்கா, ராமநாதபுரம் மாவட்டம், தமிழ்நாடு. மொத்தம் : 7.91 ஏக்கர்.	16,30,000	1,63,000	1,00,000

ஏலத்திற்கான கால அட்டவணை

வ. எண்.	நிகழ்ச்சி விவரம்	தேதி
1	ஏல விளம்பரம் வெளியீடு	ஜூன் 6, 2025 (வெள்ளிக்கிழமை)
2	வருங்கால ஏலதாரர்கள் ஏலப் படிவம், 29A தகுதி ஒப்பந்தம் மற்றும் KYC ஆவணங் களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி.	ஜூன் 9, 2025 (திங்கட்கிழமை) முதல் ஜூன் 30, 2025 (திங்கட்கிழமை) வரை
3	ஆஸ்திகளை ஆய்வு செய்தல்	ஜூன் 9, 2025 (திங்கட்கிழமை) முதல் ஜூன் 30, 2025 (திங்கட்கிழமை) வரை
4	தகுதிவாய்ந்த ஏலதாரர்களால் EMD சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	ஜூலை 7, 2025 (திங்கட்கிழமை)
5	இ - ஏலத் தேதி	ஜூலை 10,2025 (வியாழக்கிழமை) காலை 11 மணி முதல் பகல் 1 மணி வரை

குறிப்பு: வெற்றி பெற்ற ஏலதாரருக்கான பணம் செலுத்தும் காலக்கெடு வெற்றி பெற்ற ஏல ஏலதாரர், கலைப்பாளரால் வாங்குவதற்கான கடிதம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் விற்பனை நிலுவைத் தொகை பரிசீலிக்க வேண்டும். 30 நாட்களுக்குப் பிறகு ஆனால் 90 நாட்களுக்கு முன்பாக செலுத்தப்படும் தொகைக்கு 12% வட்டி விதிக்கப்படும். வாங்குவதற்கான கடிதம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் பணம் செலுத்தாவிட்டால் விற்பனை ரத்து செய்யப்படும்.

ஒப்பம்/-
ராமகிருஷ்ணன் சதாசிவன்
IBBI/IPA-001/IP-P00108/2017-18/10215
கலைப்பாளர், கோஸ்டல் எனர்ஜி பிரைவேட் லிமிடெட்
பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி : sadasivanr@gmail.com
கடித அஞ்சல் முகவரி : cirp.cepl@gmail.com

தேதி: ஜூன் 6, 2025
இடம்: சென்னை

முகவரி: பழைய எண்.22, புதிய எண்.28, மேனோட் தெரு, புரசைவாக்கம், சென்னை 600 007.
மொபைல் எண். 94444 55982

இசட் எஃப் கமர்ஷியல் வெஹிக்கிள் கண்ட்ரோல் சிஸ்டம்ஸ் இந்தியா லிமிடெட்

CIN: L34103TN2004PLC054667
பதிவு அலுவலகம்: பிளாட் எண். 3 (SP), 3-வது மெயின் ரோடு, அம்பத்தூர் இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை - 600 058. Telephone No.91 44 42242000, Fax .91 44 42242009; email: cvcs.info.india@zf.com; website: www.zf.com

பங்குதாரர்களுக்கான அறிவிப்பு

உரிமை கோரப்படாத டிவிடெண்ட் தொகை மற்றும் சமபங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணைய கணக்கிற்கு மாற்றுதல்

கம்பெனிகள் சட்டம் 2013, (சட்டம்) பிரிவு 124(6) மற்றும் 2016ம் வருடத்தைய முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையம் (கணக்கு, தணிக்கை மாற்றம் மற்றும் திருப்பி அளித்தல்) அவ்வப்போது மாற்றப்பட்ட விதிகள் விதி 6-ன்படி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

மற்ற இதர விஷயங்களுடன், மேற்கண்ட விதிகளின்படி தொடர்ந்து ஏழு ஆண்டுகளுக்கு அல்லது அதற்கு மேலாக பங்கு ஆதாயத்தொகை வழங்கப்படாத அல்லது கோரப்படாத பங்குதாரர்களின் பங்குகளை முதலீட்டாளர்களின் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையத்திற்கு மாற்றப்பட உள்ளது.

கம்பெனி 2017-18 ஆண்டு முதல் தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக கோரப்படாமல் இருக்கும் பங்கு ஆதாயத் தொகைக்கு உரிய பங்குதாரர்களுக்கு, கோரப்படாத பங்கு ஆதாயங்களை விரைவாக கோரிப்பெறுமாறு தனித்தனியாக பதிவுத் தபாலில் அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளது.

2017-18 கணக்காண்டிலிருந்து பங்கு ஆதாயத் தொகை கோராமல் இருக்கும் பங்குதாரர்கள் முழு விவரங்களுடன், கோரப்படாத பங்கு ஆதாயத்திற்கான சரியான சான்றுகளுடன் M/s. இண்டகிரேட்டட் ரிஜிஸ்ட்ரி மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், 2வது மாடி, ''கென்சஸ் டவர்ஸ்'', எண்.1, ராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை – 600 017, தொலைபேசி : 044 - 28140801-803 தொலைநகல் : 044 - 28142479, மின்னஞ்சல் : einward@integratedindia.in, முகவரிக்கு ஆகஸ்ட் 14, 2025 அன்று அல்லது அதற்குமுன் எழுதலாம்.

எந்தவொரு செல்லுபடியாகும் உரிமைகோரலும் செய்யப்படாவிட்டால், 2017–2018ஆம் ஆண்டிற்கான அனைத்து அடிப்படை பங்குகளும் (காகித வடிவில் அல்லது மின்னணு வடிவில் வைத்திருந்தாலும்) மற்றும் கோரப்படாத ஈவுத்தொகை, அத்தகைய பங்குகள் நிதிக்கு மாற்றப்பட வேண்டிய 30 நாட்களுக்குள், உங்களுக்கு எந்த அறிவிப்பும் இல்லாமல் நிறுவனத்தால் ஐஇபிஎஃப்-ன் டீமேட் கணக்கிற்கு மாற்றப்படும்.

மேலும், முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு ஆணையம் (கணக்கு, தணிக்கை மாற்றம் மற்றும் திருப்பி அளித்தல்) விதிகள் 2016, விதி 6(3)ன்படி தொடர்ந்து ஏழு வருட காலங்களாக பங்கு ஆதாயங்கள் கோரமால் இருக்கும் பங்குதாரர்களின் பெயர், முகவரி, ஃபோலியோ எண், டிமாட் கணக்கு எண் மற்றும் மாற்றப்பட வேண்டிய பங்குகளின் எண்ணிக்கை ஆகியவை பங்குதாரர்களின் தகவல்களுக்காகவும் மற்றும் உடனடியாக செயல்படவும் எங்கள் கம்பெனியின் இணையதளமான www.zf.com-ல் (ZF CV இந்தியா முதலீட்டாளர் உறவுகள் பிரிவு) வெளியிடப்பட்டுள்ளது.

முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதியில் பங்கு ஆதாயத் தொகை சேர்க்கப்பட்டபின், பங்குதாரர்கள் அப்பங்குகளை கோர விரும்பினால் அதற்காக முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்திடம் தனியாக, விதிகளின்படியான படிவம் IEPF-5-ன் மூலம் விண்ணப்பம் செய்ய வேண்டும். இவ்விண்ணப்பப் படிவம் IEPF-ன் படிவம் இணையதளம் www.iepf.gov.in-ல் கிடைக்கும்.

சென்னை
05.06.2025

போர்டின் உத்தரவுப்படி
M முத்துலெட்சுமி
கம்பெனி செயலாளர்

கனம் இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம்(ADJII)திண்டிவனம்.
E.P No. 228 OF 2023
In
ARB NO. KER/SF/ 190/2019
M/s.Sundaram finance limited,
Represented by its legal manager,
.... மனுதாரர் / DH
Vs
1.Mr.S.Marimuthu, s/o A.Senkeni, Pudhukulam, Vanur Taluk, Kodippakkam, Thenkodipakkam, Villupuram, Tamilnadu – 604 102.,
2.Mr.V.Moorthy, s/o A. Veerappan, No.88, Mettu Street, Kilsithamur, Tindivanam (T.K), Thenkodipakkam, Villupuram, Tamilnadu – 604 102. ...
எதிர்மனுதாரர் / JD

எதிர்மனுதாரர் / JD க்குஅறிவிப்பு

மேற்படி வழக்கில் மேற்கண்ட மனுதாரர் / DH, எதிர்மனுதாரர் / JDஆகிய தங்கள் மீது நிறைவேற்று மனு தொகையை வசூல்செய்யும் பொருட்டுநிறைவேற்று மனுதாக்கல் செய்து மேற்படிமனுவில் தாங்கள் ஆஜராகும்பொருட்டு வாய்தா 13.06.2025 அன்று வைக்கப்பட்டுள்ளது. அன்று காலை 10.00 மணிக்கு மேற்படி சமூகம் நீதிமன்றத்தில்தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோஆஜராகி தங்களின் ஆட்சேபனையைஎதிருரையாக தெரிவித்துக்கொள்ள வேண்டியது தவறினால் மேற்படி தாவாவில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இந்த அறிவிப்பின் மூலம்கண்டிப்பாய் அறியவும்.

வீ.இராஜசேகரன்.ML.,
வழக்கறிஞர்,
விழுப்புரம்.